## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## மேட்டூர் நகராட்சி

### மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர்அவர்களால் 30.06.2021ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.

### மன்றப் பொருள்

**1.** மேட்டூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் BOV (பேட்டரி மூலம் இயங்கும்) வாகனம் கடந்த 08.02.2019—ம் தேதி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்து நாளது தேதி வரை பொது சுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது தற்பொழுது வாகனம் கொள்முதல் செய்து 2 ஆண்டுகளுக்கு மேல் ஆவதால் சில வண்டிகளில் டயர்கள், டியூப்புகள், பேட்டரிகள் மற்றும் உதிரி பாகங்கள் பழுதடைந்துவிட்டதால் ஒப்பந்தபுள்ளி மூலம் கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.42 இலட்சத்தில் பணிகளை மேற்கொள்ளவும் அதற்க்காகும் செலவின தொகையினை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்ற அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.1194/2021/இ1)**

**தீர்மான எண் 74 நாள் 30.06.2021**

**அனுமதிக்கப்பட்டது**

2. பொது சுகாதாரம் கொரோனா வைரஸ் இரண்டாவது அலை பரவல் நோய் தொற்றை தடுக்கவும் கட்டுப்படுத்தவும் தேவையான லைசால் 2500 லிட்டர் கொள்முதல் செய்ய 21.06.2021—ம் தேதி விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் கீழ்கண்ட மூன்று நிறுவனங்களிலிருந்து 25.06.2021—ம் தேதி விலைப்புள்ளிகள் வரப்பெறப்பட்டுள்ளன.அவற்றின் விவரம்

| வ. எண். | விலைப்புள்ளி வரப்பெற்ற நிறுவனங்களின் பெயர் மற்றும் முகவரி | விலை ரூ .பை CGST SCGT உட்பட | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s.சாந்தா ஏஜென்ஸி, 43, கணக்கர் தெரு,சேலம். | ரூ. 170.00/— | அதிகம் |
| 2 | M/s.அத்தனூார் அம்மன் டிரேடர்ஸ், 1/34 ,காளப்பநாய்க்கன்பட்டி, நாமக்கல். | ரூ. 168.00/— | அதிகம் |
| 3 | M/s ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், 60/101, A1B,6 R.S.பில்டிங், குளக்கரை தெரு, காமராஜ் நகர், நாமக்கல். | ரூ.164.02/— | குறைவு |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பொது சுகாதாரம் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை தடுக்கவும், கட்டுப்படுத்தவும் தேவையான லைசால் மருந்தினை கொள்முதல் செய்ய விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரிசை எண் 1 —ல் காணும் M/s ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், 60/101, A1B,6 R.S.பில்டிங், குளக்கரை தெரு, காமராஜ் நகர், நாமக்கல் என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளியினை கொண்டுள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்திற்கு , பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதியின் பேரில் பணி உத்திரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.1113 /2021/எச்1)**

**தீர்மான எண் 75 நாள் 30.06.2021**

**அனுமதிக்கப்பட்டது**

3. பொது சுகாதாரம் கொரோனா வைரஸ் இரண்டாவது அலை பரவல் நோய் தொற்றை தடுக்கவும் கட்டுப்படுத்தவும் தேவையான பாதுகாப்பு பொருட்கள், கிருமி நாசினி மருந்துகள் கொள்முதல் செய்ய 21.06.2021-ந் தேதி விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் 25.06.2021-ம் தேதி கீழ்கண்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப் பெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | விலைப் புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | பொருட்களின் பெயர் | | | | | | | சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சோப்பு | ஹேண்ட் சானிடைசர் | ஹேண்ட் சானிடைசர் 500 மி.லி | N-95 முகக்கவசம் | முகக்கவசம் - 3 Ply | ரப்பர் கையுறை | கபசுர குடிநீர் | |
| 1 | M/s.சாந்தா ஏஜென்ஸி,<br>43, கணக்கர் தெரு,சேலம். | ரூ.43.50/– | ரூ.310/- | ரூ.230.00/– | ரூ.27.50/– | ரூ.5.25/– | ரூ.98.00/– | ரூ.1050.00/– | அதிகம் |
| 2 | M/s.அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ்,<br>1/34 ,காளப்பநாய்க்கன்பட்டி,<br>நாமக்கல். | ரூ.42.00/– | ரூ.295.00/- | ரூ.224.00/– | ரூ.25.00/– | ரூ.4.80/– | ரூ.96.00/– | ரூ.960.00/– | அதிகம் |
| 3 | M/s ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், 60/101, A1B,6 R.S.பில்டிங், குளக்கரை தெரு, காமராஜ் நகர், நாமக்கல். | ரூ.39.50/– | ரூ.280.00/- | ரூ.217.12/– | ரூ.22.00/– | ரூ.4.00/– | ரூ.88.00/– | ரூ.940.00/– | குறைவு |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதாரம் கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்கவும், கட்டுப்படுத்தவும், துாய்மை பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உடைகள் , கவசங்கள் மற்றும் கிருமிநாசினி மருந்து பொருட்கள் கொள்முதல் செய்ய வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1-ல் காணும் M/s ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன் , 60/101, A1B,6 R.S.பில்டிங் குளக்கரை தெரு, காமராஜ் நகர், நாமக்கல் என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கியுள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்திற்கு பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் உத்தரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்

**(ந.க.எண்.1113 /2021/எச்1)**

**தீர்மான எண் 76 நாள் 30.06.2021**

**அனுமதிக்கப்பட்டது**

4. பொது சுகாதாரம் கொரோனா வைரஸ் இரண்டாவது அலை பரவல் நோய் தொற்றை தடுக்கவும் கட்டுப்படுத்தவும் தேவையான பிளிச்சிங் பவுடர் மற்றும் சுண்ணாம்புதூள் கொள்முதல் செய்ய 21.06.2021–ம் தேதி ஒப்பந்த புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் 25.06.2021–ம் தேதி கீழ்காணும் மூன்று நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | ஒப்பந்த புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | பிளிச்சிங் பவுடர் கிலோ 1-க்கு ரூ.பை. | சுண்ணாம்புதூள் கிலோ1-க்கு ரூ.பை. | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | M/s.செயலாளர் K.K.251, ஊரக விரிவாக்க பயிற்சி நிலைய கூட்டுறவு பண்டகசாலை , கிருஷ்ணகிரி | ரூ.49.00/- | ரூ.13.00/- | அதிகம். |
| 2 | M/s.செயலாளர் S-527, கெலமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், கெலமங்கலம். | ரூ.46.00/- | ரூ.12.00/- | அதிகம். |
| 3 | M/s.செயலாளர்D.D.165, பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், பென்னாகரம். | ரூ.42.00/- | ரூ.9.50/- | குறைவு. |

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) பொது சுகாதார பணிகளுக்கும், பொது சுகாதாரம் கொரோனா வைரஸ் இரண்டாவது அலை பரவல் நோய் தொற்றை தடுக்கவும் கட்டுப்படுத்தவும் தேவையான பிளிச்சிங் பவுடர் மற்றும் சுண்ணாம்புதூள் கொள்முதல் செய்ய வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.3–ல் காணும் M/s.செயலாளர், பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், பென்னாகரம் என்ற அரசு சார்ந்த நிறுவனம் என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கியுள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்திற்கு பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் உத்தரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்

**(ந.க.எண்.1113 /2021/எச்1)**

**தீர்மான எண் 77 நாள் 30.06.2021**

**அனுமதிக்கப்பட்டது**

5. மேட்டூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் தூய்மைப்பணியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.ஆனந்தி/கண்ணன் என்பவர் தனது குடும்பம் சேலத்தில் உள்ளதாகவும், தனக்கு வயிற்று பகுதியில் செய்யப்பட்டுள்ள அறுவை சிகிச்சையின் காரணமாக சேலத்தில் இருந்து தொடர் சிகிச்சை பெற வேண்டியுள்ளதாகவும், தனது உடல் நிலையை கருத்தில் கொண்டு சேலம் மாநகராட்சிக்கு மாற்றம் செய்து தரக்கேட்டு விண்ணப்பித்துள்ளார். எனவே, அன்னார் மேட்டூர் நகராட்சியிலிருந்து சேலம் மாநகராட்சிக்கு பணியிட மாற்றம் கோரும் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

(அ). மன்றம் அனுமதிக்கலாம்.

(ஆ). மேற்படி விண்ணப்பத்தினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் வழியாக அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.4075/2019/எச்1)**

**தீர்மான எண் 78 நாள் 30.06.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**6.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.5437/2021/ஜே1, நாள்.23.05.2021–ன்படி கொரோனா இரண்டாவது அலை பரவல் தடுப்பு நடவடிக்கையாக காய்ச்சல் தொற்று கண்டறியும் பணிக்கு, இந்நகராட்சிக்கு உட்பட்ட 12501 வீடுகளில் தலா 100 வீடுகளுக்கு ஒரு நபர் என்ற அடிப்படையில் 125 நபர்களை தற்காலிகமாக நியமித்து உத்தரவிடப்பட்டது. இக்கணக்கெடுப்பு பணி

மேற்கொண்டவர்களில் DBC பணியாளர்களுக்கு தினகூலி வழங்கப்படுகிறது. மேலும் அங்கன்வாடி பணியாளர்களும் இப்பணியில் ஈடுபட்டனர். இது தவிர மகளிர் சுய உதவிக்குழுவினர் மற்றும் தன்னார்வலர்களும் ஈடுபடுத்த முயற்சித்தும் இப்பணியில் ஈடுபட தயக்கம் காட்டினர். இச்சூழ்நிலையில் போதுமான எண்ணிக்கையில் தினசரி பணியாளர்கள் வருகை சுணக்கம் ஏற்பட்ட நிலையில், மாவட்ட ஆட்சியரின் அறிவுரையின்படி காய்ச்சல் கணக்கெடுப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்ட ஏனைய மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு இதர நகராட்சி, பேரூராட்சிகளில் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு வழங்குவது போல குறைந்தபட்ச தினக்கூலி ஊதியமாக நாள் 1-க்கு நபர் ஒருவருக்கு ரூ.250/- ஊதியம் வழங்கவும், மேற்காணும் கணக்கெடுப்பு பணிகளை கண்காணிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்ட 6 மண்டல அலுவலர்களுக்கும் வாடகை அடிப்டையில் வாகனங்கள் ஏற்பாடு செய்தும், மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு, ந.க.8230/2020/பே.மே, நாள்.04.06.2021-ல் உத்தரவிடப்பட்டதன்படி, இப்பணியில் ஈடுபடுத்தப்பட்ட வாகனங்களுக்கு 21.05.2021, 22.05.2021 மற்றும் 24.05.2021 முதல் 02.06.2021 வரையிலும், 03.06.2021 முதல் கணக்கெடுப்பு பணி முடிவடையும் வரையிலும் வாகனங்களுக்கான வாடகை மற்றும் எரிபொருள் செலவினம் வழங்கவும், இப்பணியில் கிருமி நாசினி தெளிப்பதற்காக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து 28.05.2021 ஆம் தேதி முதல் பெறப்பட்ட ஜெட்டிங் இயந்திர வாகனத்தினை இயக்கி வரும் ஓட்டுநருக்கு நாள் ஒன்றுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம் அவர்களால் 2019-2020ம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி ரூ.576/-ஐ வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இச்செலவினங்களை கொரோனா தடுப்பு பணிக்கு வரப்பெற்ற தமிழக அரசின் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் பரிசீலித்து அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1113 /2021/எச்1)**

**தீர்மான எண் 79 நாள் 30.06.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**7.** மேட்டூர் நகராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்கள் மற்றும் காலஞ்சென்ற பணியாளர்களின் வாரிசுதாரர்கள் தங்களுக்கு வழங்க வேண்டிய பணப்பயன்களை வழங்க கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு W.P.No.2560/2019 மற்றும் W.P.No.30333/2019 தொடர்ந்து மேலும் வழக்கின் தீர்ப்பில் பணியாளர்களுக்கு உண்டான பணப்பயன்களை வாதியின் வழக்கறிஞரின் வாதுரையில் தெரிவித்துள்ள விவரப்படி உடன் வழங்குமாறு உத்திரவிடப்பட்டுள்ளது.

பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய பணப்பயன்களில் 2017–18 முதல் 2019–20 வரையிலான காலங்களில் பணிபுரிந்த பணியாளர்களுக்கு சேமநல நிதி வட்டி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, சென்னை அவர்களிடமிருந்து பெறுவது நிலுவையாக உள்ளது

ஓய்வூதியர்கள் சங்கத்தினரின் வழக்கறிஞர் திரு.ஏ.ஆர்.நிக்சன் அவர்கள் மேற்படி வழக்கு குறித்து நீதி மன்ற அவமதிப்பு வழக்கு தொடர போவதாக 18.03.2021 அன்று அறிவிப்பு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

எனவே நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தவிர்க்கும் விதமாக 2017–18 முதல் 2019–20 வரை காலத்திற்கு சேமநல நிதி வட்டி கணக்கீடு செய்து இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டியுள்ளது. மேலும் வட்டி தொகை கணக்கீடு செய்வதற்கு இந்நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததால், தனியார் நிறுவனம் மூலம் பிரேரணை தயார்

செய்ய விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில், வரபெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | வழங்கப்பட்ட விலைப்புள்ளி ரூ. | விலைப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | RAM SOLUTIONS,<br>No.55/15th East Street, Kamaraj Nagar,<br>Thiruvanmmiyar, Chennai-600041 | ரூ.65,000/– | அதிகம் |
| 2 | OZONE Technologies,<br>#15,(Old No.6) Lake View Road, Kottur,<br>Chennai-600085 | ரூ.68,500/– | அதிகம் |
| 3 | SANJAY SOLUTIONS,<br>No.14H A.V.R Line, South Colony,<br>Komarapalayam, Namakkal District. | ரூ.60,000/– | குறைவு |

**அலுவலக குறிப்பு:**

1. வரபெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.3–ல் கண்டுள்ள திருவாளர்.SANJAY SOLUTIONS, Komarapalayam. என்ற நிறுவனத்தார் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ரூ.60,000/– வழங்கியுள்ளார். எனவே மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணிக்கான செலவுத் தொகை ரூ.60,000/–யை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து வழங்கலாம்.

**தீர்மான எண் 80 நாள் 30.06.2021**
**அனுமதிக்கப்பட்டது**

**தனி அலுவலர்/ஆணையாளர்**
**மேட்டூர் நகராட்சி**